மோட்டார் வாகன விபத்து கோருரிமை தீர்ப்பாயம்
சிறப்பு சார்பு நீதிமன்றம் (MACT), தருமபுரி.
முன்னிலை திருமதி.S.விபிசி, M.L.,
சிறப்பு சார்பு நீதிபதி (MACT), தருமபுரி,
2026 ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 11 ம் நாள் செவ்வாய்க்கிழமை
திருவள்ளுவர் ஆண்டு 2057 ஸ்ரீ பராபவ வருடம் ஆடி மாதம் 26 ம் நாள்

CNR.No.TNDP0C-000806-2024

எம்.சி.ஓ.பி.எண் : 156/2025

சிவக்குமார் ... மனுதாரர்

/எதிர் /

1. R.செல்வராணி
2. மக்மா HDI ஜெனரல் இன்சூரன்ஸ் கம்பெனி லிட், கோயம்புத்தூர். ... எதிர்மனுதாரர்கள்

(a)	இழப்பீடு கோருபவரின் பெயர் மற்றும் முகவரி:	சிவக்குமார், த/பெ. குப்புசாமி, வயது 30, மோட்டுப்பட்டி கிராமம், சத்திநாதபுரம் அஞ்சல், பென்னாகரம் வட்டம், தருமபுரி மாவட்டம்.
(b)	எதிர்மனுதாரர்களின் பெயர் மற்றும் முகவரி:	1. செல்வராணி, க/பெ. ராமு, கண்ணகி நகர், சிறுபுழுவப்பட்டி, காந்தி நகர், திருப்பூர் – 641 603 2. மேலாளர், மேக்மா HDI ஜெனரல் இன்சூரன்ஸ் கம்பெனி லிமிடெட், 2 வது தளம், பிருந்தாபாரன் பில்டிங், யுனிட் எண்.218, 2–2, திருவேங்கடசாமி ரோடு, W, R.S.புரம், கோயம்புத்தூர் – 641 002.
(c)	பெயர் மற்றும் காப்பீடு நிறுவனத்தின் முகவரி:	மேலாளர், மேக்மா HDI ஜெனரல் இன்சூரன்ஸ் கம்பெனி லிமிடெட், 2 வது தளம், பிருந்தாபாரன் பில்டிங், யுனிட் எண்.218, 2–2, திருவேங்கடசாமி ரோடு, W, R.S.புரம், கோயம்புத்தூர் – 641 002.
(d)	மாநகர போக்குவரத்து கழகம் (அ) இதர இழப்பீடு தொகை செலுத்தத்தக்க எதிர்மனுதாரர்கள் பெயர் மற்றும் முகவரி:	இம்மனுவிற்கு பொருந்தத்தக்கதல்ல
(e)	இழப்பீடு கோரிக்கை மனு	20.01.2025

S VIPICEE
Digitally signed by S VIPICEE
Date: 2026.08.11 13:57:40 -0800

	தாக்கல் செய்த தேதி	
(f)	உத்தரவு பிறப்பிக்கப்பட்ட தேதி	11.08.2026
(g)	பிறப்பிக்கப்பட்ட இழப்பீட்டு தொகை விபரம்	**ரூ.2,90,600/-** (ரூபாய் இரண்டு லட்சத்து தொண்ணூறாயிரத்து அறநூறு மட்டும்)
(h)	வட்டி விகிதம்	7.5%
(i)	எந்த தேதியிலிருந்து வட்டி தொகை செலுத்தப்பட வேண்டும்	20.01.2025
(j)	செலவுத்தொகை விபரம் ஏதாவது இருப்பின்:	பிராசஸ் கட்டணம் ரூ. 10.00 ஆவணங்களின் மீதான முத்திரை கட்டணம் ரூ. 50.00 வக்காலத்திற்கான முத்திரை கட்டணம் ரூ. 10.00 நீதிமன்றகட்டணம் ரூ. 2,278.50 வழக்கறிஞர் கட்டணம் ரூ. 18,030.00 தட்டச்சு கட்டணம் ரூ. 100.00 மொத்தம் ரூ. 20,478.50
(k)	உத்தரவின்படி இழப்பீட்டு தொகை, வட்டி மற்றும் செலவுத்தொகையை யார் செலுத்த வேண்டும் என்பது சம்பந்தமான விபரம்	2ம் எதிர்மனுதாரர் இழப்பீட்டு தொகை முழுவதையும் வட்டி மற்றும் செலவுத் தொகையுடன் வைப்பீடு செய்துவிட்டு அதை 1ம் எதிர்மனுதாரரிடம் இருந்து 2ம் எதிர்மனுதாரர் வசூலித்துக் கொள்ள வேண்டும்.
(l)	மனுவில் பல கோரிக்கையாளர்கள் இருக்கும் பட்சத்தில் ஒவ்வொரு கோருரிமையருக்கும் இழப்பீட்டு தொகையில் கிடைக்கத்தக்க பாக விபரம்	பொருந்தத்தக்கதல்ல

S VIPICEE Digitally signed by S VIPICEE
Date: 2026.08.11 13:57:50 -0800

(m)	இழப்பீட்டு தொகை எதன் மூலமாக, எந்த வகையில் செலுத்தப்பட வேண்டும் என்பது சம்பந்தமான விபரம்	இழப்பீட்டு தொகையை இந்நீதிமன்றத்திற்கான வங்கி கணக்கு எண் தருமபுரி மாவட்டம், ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியா பிரதான கிளை VAN Collection No.SSJDP1MCOP1562025, IFSC Code: SBIN0004266 என்ற கணக்கில் இவ்வுத்தரவு பிறப்பிக்கப்பட்ட 30 நாட்களுக்குள் செலுத்த வேண்டும்.
(n)	இழப்பீட்டு தொகை கோருரிமையர் எவ்வாறு பெற்றுக்கொள்ளுவது என்பது சம்பந்தமாக பிறப்பிக்கப்பட்ட உத்தரவு விபரம்	2ம் எதிர்மனுதாரர் இழப்பீட்டு தொகை முழுவதையும் வைப்பீடு செய்த பின்பு மனுதாரர் இழப்பீட்டு தொகையை முழுவதையும் உடனடியாக எடுத்துக்கொள்ள அனுமதித்து உத்தரவிடப்படுகிறது.
(o)	எந்த குறிப்பிட்ட காலத்திற்கு இழப்பீட்டு தொகைக்கான வட்டி கோருரிமையருக்கு கிடைக்கத்தக்க தல்ல என்ற விபரம் ஏதேனும் இருப்பின்	இல்லை
(p)	இதுவரை செலுத்தப்பட்ட நீதிமன்ற கட்டணம்	**₹. 372.50**
(q)	உத்தரவு பிறப்பிக்கப்பட்ட தேதியிலிருந்து இரு வாரங்களுக்குள் செலுத்தப்பட வேண்டிய மீதி நீதிமன்ற கட்டணம்	**₹. 1,906/-**
(r)	திருப்பி வழங்கத்தக்க கூடுதல் நீதிமன்ற கட்டணம்	இல்லை

இந்த மனு கடந்த 20.02.2025ம் தேதியன்று மாண்புமிகு சிறப்பு மாவட்ட நீதிமன்றம் தருமபுரியில் கோப்பிற்கு எடுக்கப்பட்டு பின்னர் மாண்பமை முதன்மை மாவட்ட நீதிபதி, தருமபுரி அவர்களின் கடித எண்.270/2025, 14.03.2025ம் தேதிய ஆணைப்படி இந்த நீதிமன்றத்திற்கு மாற்றப்பட்டு அதன் பின்னர் இந்த வழக்கு இதுநாள் வரையில் இந்நீதிமன்ற பரிசீலனையிலிருந்து

S VIPICEE
Digitally signed by S VIPICEE
Date: 2026.08.11 13:57:54 -0800

இறுதி விசாரணைக்கு வந்தபோது, மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.R.சிவம் அவர்கள் முன்னிலையாகியும், 1ம் எதிர்மனுதாரர் தோன்றாதரப்பினர் ஆகியும், 2ம் எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.S.பாரதிராஜா அவர்கள் முன்னிலையாகியும் இரு தரப்பு வாதங்களை கேட்டும், இரு தரப்பு சாட்சிய சான்றவணங்களை பரிசீலனை செய்தும் இன்று இந்த தீர்ப்பாயம் வழங்கும்

<u>**உத்தரவு**</u>

29.01.2022 ஆம் தேதியில் நடந்த சாலை விபத்தில் காயமடைந்த மனுதாரர் இழப்பீடாக ரூ.30,00,000/- கோரி இம்மனுவை மோட்டார் வாகன சட்டப் பிரிவு 166ன் கீழ் தாக்கல் செய்துள்ளார்.

2. <u>மனுவின் சாராம்சம்:</u>

கடந்த 29.01.2022ம் தேதி இரவு சுமார் 10.30 மணியளவில் மனுதாரர் திருப்பூர் கல்லூரி சாலை - மாஸ்கோ நகர் ரோட்டில் சண்முகா ஆலோபிளாக் கடை முன்பாக நடந்து சென்று கொண்டிருந்த போது எதிர்திசையில் வந்த TN.39.CQ.6583 என்ற பதிவெண் கொண்ட பஜாஜ் பல்சர் இருசக்கர வாகனத்தை அதன் ஓட்டுனர் அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும், கவனக்குறைவாகவும் ஓட்டிச் சென்று மனுதாரர் மீது மோதி விபத்தை ஏற்படுத்தியுள்ளார். இந்த விபத்தினால் மனுதாரருக்கு தலை, வலது மற்றும் இடது கை முட்டி, முதுகு ஆகிய இடங்களில் இரத்த சிராய்ப்பு காயங்களும், இடது கண் அருகே பலத்த இரத்தக்காயங்களும் மற்றும் உடல் முழுவதும் இரத்தக்காயங்களும், உள்காயங்களும் ஏற்பட்டுள்ளது. உடனடியாக கேர் ஆர்த்தோ மருத்துவமனையில் முதலுதவி சிகிச்சை பெற்றுக் கொண்டு பின்னர் மனுதாரர் கோவை பிஎஸ்ஜி மருத்துவமனையில் உள்நோயாளியாக இருந்து சிகிச்சை பெற்றுள்ளார். விபத்து சமயத்தில் மனுதாரரின் வயது 30. விபத்து சமயத்தில் மனுதாரர் ஆரோக்கியமாகவும், திடகாத்திரமாகவும் இருந்து தனியார் நிறுவனத்தில் சேல்ஸ் மேன் ஆகவும், குவாலிடி கன்ட்ரோலராகவும், அயர்ன்

S VIPICEE
Digitally signed by S VIPICEE
Date: 2026.08.11 13:58:00 -0800

மாஸ்டராகவும் வேலை செய்து மாதம் ரூ.30,000/–க்கு மேல் வருமானம் ஈட்டி வந்துள்ளார். இந்த விபத்தினால் மனுதாரருக்கு வருவாய் இழப்பும், நிரந்தர ஊனமும் ஏற்பட்டுள்ளது. விபத்து குறித்து திருப்பூர் வடக்கு காவல் நிலையத்தில் குற்ற எண்.129/2022 சட்டப்பிரிவு 279, 337 இ.த.ச. படி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது. இந்த விபத்தானது TN.39.CQ.6583 என்ற 1ம் எதிர்மனுதாரருக்கு சொந்தமான 2ம் எதிர்மனுதாரரிடம் காப்பீடு செய்யப்பட்ட வாகன ஓட்டுனரின் கவனக்குறைவால் ஏற்பட்டுள்ளது. இந்த விபத்தினால் மனுதாரருக்கு ஏற்பட்ட இழப்பிற்காக எதிர்மனுதாரர்கள் இருவரும் தனித்தோ அல்லது கூட்டாகவோ மனுதாரருக்கு இழப்பீடு வழங்க கடமைப்பட்டுள்ளார்கள்.

3. <u>2ம் எதிர்மனுதாரர் தரப்பு எதிருரையின் சாராம்சம் :</u>

இந்த மனு சட்டப்படிக்கும், நியாயப்படிக்கும் நிலைக்கத்தக்கது அல்ல. பொய்யான சங்கதிகளை கொண்டு மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மனுவில் சொல்லியுள்ள சங்கதிகளில் 2ம் எதிர்மனுதாரர் ஒப்புக்கொண்டதை தவிர மற்ற அனைத்தையும் மனுதாரரே நிரூபணம் செய்ய வேண்டும். விபத்து ஏற்பட்ட விதம் குறித்தும், அதற்கான காரணம் குறித்தும் மனுவில் கூறியவை மறுக்கப்படுகிறது. 1ம் எதிர்மனுதாரரின் வாகனம் விபத்து சமயத்தில் இந்த எதிர்மனுதாரரிடம் காப்பீடு செய்யப்படவில்லை. விபத்து சமயத்தில் 1ம் எதிர்மனுதாரரின் வாகனத்தின் ஓட்டுனருக்கு செல்லத்தக்க ஓட்டுனர் உரிமம் இல்லை. இவ்வழக்கானது காலவரையறையால் பாதிக்கப்பட்டுள்ளது. விபத்து ஏற்பட்ட இடம், தேதி, நேரம் ஆகியவை மறுக்கப்படுகிறது. விபத்து குறித்த தகவலை 1ம் எதிர்மனுதாரர் தரப்பில் இருந்து இந்த எதிர்மனுதாரருக்கு தெரிவிக்கவில்லை. விபத்து குறித்த ஆவணங்கள் எதுவும் சம்மந்தப்பட்ட காவல் நிலையத்தில் இருந்து எதிர்மனுதாரருக்கு வழங்கப்படவில்லை. இந்த விபத்தானது 1ம் எதிர்மனுதாரரின் வாகன ஓட்டுனரின் கவனக்குறைவு மற்றும் அஜாக்கிரதையால் ஏற்படவில்லை. மனுதாரர் கவனக்குறைவான முறையில் 1ம் எதிர்மனுதாரரின் வாகன ஓட்டுனர் ஒலி எழுப்புவதை கவனிக்காமல் ரோட்டை கடந்து விபத்தை ஏற்படுத்தியுள்ளார். இந்த விபத்திற்கு மனுதாரரே காரணம்

S VIPICEE

Digitally signed by S VIPICEE
Date: 2026.08.11 13:58:05 -0800

ஆவார். பொய்யான சங்கதிகளின் பேரில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது. மனுதாரருக்கு நிரந்தர ஊனம் எதுவும் ஏற்படவில்லை. மனுதாரரின் வயது, தொழில், வருமானம், மனுதாரருக்கு ஏற்பட்டதாக சொல்லும் காயங்கள், அதற்கு அவர் மேற்கொண்ட சிகிச்சைகள், அதற்கு ஏற்பட்ட செலவினம் ஆகியவை குறித்து மறுக்கப்படுகிறது. கோரியுள்ள இழப்பீட்டுத் தொகை மற்றும் வட்டி அதிகமானது. மேற்சொன்ன காரணங்களால் மனுவை செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும்.

4) 1ம் எதிர்மனுதாரர் அறிவிப்பை பெற்றுக் கொண்டு ஆஜராகாததால் 1ம் எதிர்மனுதாரருக்கு எதிராக தோன்றாதரப்பினர் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. மனுதாரர் தரப்பில் மனுதாரர் ம.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு அவர் மூலம் ம.சா.ஆ.1 முதல் ம.சா.ஆ.12 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. 2ம் எதிர்மனுதாரர் தரப்பில் அந்த நிறுவனத்தின் சட்ட மேலாளர் எ.ம.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு அவர் மூலம் எ.ம.சா.ஆ.1 முதல் எ.ம.சா.ஆ.5 வரையிலான சான்றாவணங்களும், திருப்பூர் வட்டார போக்குவரத்து அலுவலகத்தின் தட்டச்சர் எ.ம.சா.2 ஆக விசாரிக்கப்பட்டு அவர் மூலம் எ.ம.சா.ஆ.6 முதல் எ.ம.சா.ஆ.10 வரையிலான சான்றாவணங்களும் குறியீடு செய்யப்பட்டுள்ளது. மனுதாரரின் ஊனச் சான்றிதழ் நீ.ம.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. 2ம் எதிர்மனுதாரர் தரப்பில் மோட்டார் வாகன சட்டப் பிரிவு 170ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அது அனுமதிக்கப்பட்டுள்ளது.

5) இந்த வழக்கானது மோட்டார் வாகன திருத்தச்சட்டம் அமுலுக்கு வருவதற்கு முன்னதாகவே 29.01.2022ம் தேதி ஏற்பட்டுள்ளதாலும், விபத்து குறித்து 30.01.2022ம் தேதியே முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளதாலும் இந்த வழக்கானது 2ம் எதிர்மனுதாரர் தரப்பில் முன்வைத்தது போல் காலவரையறையால் பாதிக்கப்படவில்லை என்றே இந்த தீர்ப்பாயம் முடிவு செய்கிறது.

6. <u>இம்மனுவில் ஆராய வேண்டிய பிரச்சினை யாதெனில்</u> :

1. விபத்திற்கு TN.39.CQ.6583 வாகன ஓட்டுனரின் கவனக்குறைவும், அஜாக்கிரதையும் தான் காரணமா?

S VIPICEE
Digitally signed by S VIPICEE
Date: 2026.08.11 13:58:12 -0800

2. மனுதாரர் இழப்பீடு கோர உரிமை உடையவரா ?
3. மனுதாரருக்கு எதிர்மனுதாரர்கள் இழப்பீடு வழங்க கடமைப்பட்டவர்களா?
4. மனுதாரருக்கு வழங்க வேண்டிய இழப்பீடு தொகை எவ்வளவு ?
5. மனுதாரருக்கு கிடைக்கும் இதர பரிகாரங்கள் யாவை?

7. <u>பிரச்சினை எண்.1 க்கான தீர்வு :</u>

7.1) இம்மனு 29.01.2022 ம் தேதியில் நடந்த விபத்தினால் மனுதாரருக்கு ஏற்பட்ட காயத்திற்கு இழப்பீடு கோரி மோட்டார் வாகன சட்டப்பிரிவு 166 ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி பிரிவின் படி மனுதாரர் இழப்பீடு கோர வேண்டுமானால் விபத்து ஏற்படுத்திய வாகனத்தின் ஓட்டுனரின் கவனகுறைவை மனுதாரர் நிரூபிக்க வேண்டும்.

7.2) விபத்தை நேரில் கண்ணுற்ற சாட்சியான இம்மனுவின் மனுதாரர் ம.சா.1 ஆக விசாரிக்கப்பட்டபோது, தனது சாட்சியத்தில் கடந்த 29.01.2022 ம் தேதி இரவு சுமார் 10.30 மணியளவில் மனுதாரர் திருப்பூர் கல்லூரி சாலை – மாஸ்கோ நகர் ரோட்டில் சண்முகா ஆலோபிளாக் கடை முன்பாக நடந்து சென்று கொண்டிருந்த போது எதிர்திசையில் வந்த TN.39.CQ.6583 என்ற பதிவெண் கொண்ட பஜாஜ் பல்சர் இருசக்கர வாகனத்தை அதன் ஓட்டுனர் அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும், கவனக்குறைவாகவும் ஓட்டிச் சென்று மனுதாரர் சென்ற இருசக்கர வாகனத்தின் மீது மோதி விபத்து ஏற்பட்டதாக சாட்சியம் அளித்துள்ளார்.

7.3) மோட்டார் வாகன விபத்து இழப்பீடு கோரும் மனுக்களில் மனுதாரர் தங்களது வழக்கை சாத்தியக் கூறுகளின் மேம்பட்ட நிலை மூலம் நிரூபித்தால் போதுமானது என நமது மாண்புமிகு உச்சநீதிமன்றம் 2009 ACJ 1725 (AC) Bimla Devi Vs Himachal Road Transport Corporation and Others என்ற முன்தீர்ப்பில் கூறியுள்ளது.

7.4) மனுதாரர் தரப்பில் விசாரிக்கப்பட்ட ம.சா.1 இந்த விபத்திற்கு TN.39.CQ.6583 என்ற பதிவு எண் கொண்ட இருசக்கர வாகனத்தின் ஓட்டுனரின் கவனக்குறைவுதான் காரணம் என சாட்சியம் அளித்துள்ளார். மேலும் மனுதாரர்

S VIPICEE
Digitally signed by S VIPICEE
Date: 2026.08.11 13:58:16 -0800

தரப்பில் விபத்து குறித்து காவல் துறையினர் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கை ம.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேற்படி ஆவணத்தைப் பார்க்கையில் விபத்தானது TN.39.CQ.6583 என்ற பதிவு எண் கொண்ட வாகனத்தின் ஓட்டுனரின் கவனக்குறைவு மற்றும் அஜாக்கிரதையால் நடைபெற்றதாக காவல்துறையினர் வழக்கு பதிவு செய்துள்ளார்கள் என்பது தெரியவருகிறது.

7.5) 2ம் எதிர்மனுதாரர் தரப்பில் விபத்து 1ம் எதிர்மனுதாரரின் வாகன ஓட்டுனரின் கவனக்குறைவு மற்றும் அஜாக்கிரதையால் ஏற்படவில்லை என்றும், மனுதாரரின் தவறால் தான் விபத்து ஏற்பட்டது என்றும் ஆட்சேபனை செய்திருப்பினும் அவற்றை உண்மையென நிரூபணம் செய்ய ஏதுவாக எவ்வித நேரடி சாட்சியங்களையும் சமர்ப்பிக்கவில்லை.

7.6) இந்த விபத்திற்கு 1ம் எதிர்மனுதாரர் வாகனத்தின் ஓட்டுனரின் அதிவேகம் மற்றும் அஜாக்கிரதை தான் காரணம் என ம.சா.1 சாட்சியம் அளித்துள்ள நிலையிலும், ம.சா.ஆ.1 முதல் தகவல் அறிக்கை 1ம் எதிர்மனுதாரரின் வாகன ஓட்டுனரின் மீது பதிவு செய்யப்பட்டுள்ள நிலையிலும் 1ம் எதிர்மனுதாரர் வாகனத்தின் ஓட்டுனர் இந்த விபத்திற்கு எவ்வகையிலும் காரணம் அல்ல என்பதை காண்பிக்கும் பொருட்டு எதிர்மனுதாரர்கள் தரப்பில் எவ்வித நேரடி சாட்சியங்களும் சமர்ப்பிக்கப்படவில்லை. இந்நிலையில் 2ம் எதிர்மனுதாரரின் மேற்சொன்ன எதிர்வாதமானது முறையாக நிரூபணம் செய்யப்படவில்லை என்றே இந்த தீர்ப்பாயம் கருதுகிறது.

7.7) எனவே, மனுதாரர் தரப்பு சாட்சிய சான்றாவணங்களின் படி விபத்தானது 1ம் எதிர்மனுதாரரின் வாகன ஓட்டுனரின் கவனகுறைவு, அதிவேகம், அஜாக்கிரதையால் தான் ஏற்பட்டுள்ளது என்பது மனுதாரர் தரப்பில் சாத்தியக் கூறுகளின் மேம்பட்ட நிலை மூலம் நிரூபிக்கப்பட்டுள்ளது என்றே இந்த தீர்ப்பாயம் கருதுகிறது. அவ்வாறே இப்பிரச்சினைக்கு மனுதாரருக்கு சாதகமாக தீர்வு காணப்படுகிறது.

S VIPICEE
Digitally signed by S VIPICEE
Date: 2026.08.11 13:58:22 -0800

8. <u>பிரச்சினை எண். 2, 3 க்கான தீர்வு :</u>

8.1) ம.சா.1 தனது சாட்சியத்தில் விபத்தினால் அவருக்கு தலை, வலது மற்றும் இடது கை முட்டி, முதுகு ஆகிய இடங்களில் இரத்த சிராய்ப்பு காயங்களும், இடது கண் அருகே பலத்த இரத்தக்காயங்களும் மற்றும் உடல் முழுவதும் இரத்தக்காயங்களும் ஏற்பட்டதாக சாட்சியம் அளித்துள்ளார். ம.சா.ஆ.1 முதல் தகவல் அறிக்கை, ம.சா.ஆ.2 விபத்து பதிவேடுடன் கூடிய காயச்சான்று, ம.சா.ஆ.3 விடுவிப்பு அறிக்கை ஆகியவற்றில் இருந்து கடந்த 29.01.2022 ம் தேதியன்று மனுதாரருக்கு சாலை விபத்து ஏற்பட்டு அதனால் அவருக்கு காயங்கள் ஏற்பட்டிருப்பது தெரிய வருகிறது.

8.2) ம.சா.1ன் சாட்சியம் மற்றும் ம.சா.ஆ.1 முதல் ம.சா.ஆ.3 வரையிலான சான்றாவணங்களில் இருந்து மனுதாரர் சாலை விபத்தில் காயம்பட்ட நபர் என்பது நிரூபணமாகிறது. மனுதாரர் விபத்தினால் காயம்பட்ட நபர் என்பதால் இழப்பீடு கோர உரிமையுடையவர். இந்நிலையில் மனுதாரருக்கான இழப்பீட்டை எதிர்மனுதாரர்கள் செலுத்த கடமைப்பட்டவர்களா என்பதை காண வேண்டியுள்ளது. மனுதாரர் தரப்பில் விபத்து ஏற்படுத்திய TN.39.CQ.6583 என்ற வாகனம் 1ம் எதிர்மனுதாரருக்கு சொந்தமானது என்றும், அந்த வாகனத்திற்கு 2ம் எதிர்மனுதாரர் நிறுவனம் 1ம் எதிர்மனுதாரர் பெயரில் காப்பீடு வழங்கியுள்ளது என்றும் மனுவில் கூறி அவ்வாறே ம.சா.1 சாட்சியம் அளித்துள்ளார்.

8.3) விபத்தை ஏற்படுத்திய TN.39.CQ.6583 என்ற வாகனத்தின் உரிமையாளர் 1ம் எதிர்மனுதாரர் என்று ம.சா.ஆ.5 பதிவு சான்றிலும், ம.சா.ஆ.6, எ.ம.சா.ஆ.1 காப்பீட்டு சான்றிலும், ம.சா.ஆ.7 மோட்டார் வாகன ஆய்வறிக்கையிலும் குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்படி ஆவணங்களை பார்க்கையில் விபத்து ஏற்படுத்திய TN.39.CQ.6583 என்ற வாகனத்தின் உரிமையாளர் 1ம் எதிர்மனுதாரர் என்பதும், இந்த வாகனம் 14.01.2021 முதல் 13.01.2026 வரை அதாவது விபத்து சமயத்தில் 2ம் எதிர்மனுதாரர் நிறுவனத்தில் காப்பீடு செய்யப்பட்டுள்ளது என்பதும் தெரிய வருகிறது.

S VIPICEE
Digitally signed by S VIPICEE
Date: 2026.08.11 13:58:26 -0800

8.4) 2ம் எதிர்மனுதாரர் தரப்பில் விபத்து சமயத்தில் விபத்து வாகனத்தை ஓட்டுவதற்கான ஓட்டுனர் உரிமம் மேற்படி வாகனத்தின் ஓட்டுனருக்கு இல்லை என்றும், மேற்படி செயல் காப்பீடு விதிமுறை மீறிய செயல் என்பதால் 2ம் எதிர்மனுதாரர் நிறுவனம் மனுதாரருக்கான இழப்பீட்டை செலுத்த கடமைப்பட்டதல்ல என்றும் எதிர் வழக்காடப்பட்டுள்ளது. ம.சா.ஆ.7 மோட்டார் வாகன ஆய்வறிக்கையில் விபத்தின் போது 1ம் எதிர்மனுதாரரின் வாகனத்தை சிவசந்துரு, த/பெ. ராமு, மாஸ்கோ நகர், கல்லூரி சாலை, திருப்பூர் என்பவர் ஓட்டிச் சென்றதாகவும், மோட்டார் வாகன ஆய்வின் போது ஓட்டுனர் உரிமத்தை அவர் சமர்ப்பிக்கவில்லை எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

8.5) காப்பீடு விதிமுறை மீறிய செயலை நிரூபிப்பது குறித்து நமது மாண்புமிகு உச்சநீதிமன்றத்தால் வழங்கப்பட்ட National Insurance Company Ltd., VS Swaran singh and others (2004 1 TNMAC 104) என்ற முன் தீர்ப்பின்படியும், The Oriental Insurance Company Ltd., VS Meena variyal and others (2007 ACJ 1284) என்ற முன் தீர்ப்பின்படியும், பார்க்கையில் காப்பீடு விதிமுறை மீறிய செயலை நிரூபிக்க வேண்டிய பொறுப்பு காப்பீட்டு நிறுவனத்தை சார்ந்தது என்பதும், வாகனத்தின் ஓட்டுனருக்கு ஓட்டுனர் உரிமம் இல்லை என்பதை நிரூபித்தால் மட்டும் போதாது என்பதும், ஓட்டுனருக்கு ஓட்டுனர் உரிமம் இல்லை என்பதை தெரிந்தே வாகனத்தை ஓட்ட உரிமையாளர் அனுமதித்தார் என்பதையும் காப்பீட்டு நிறுவனம் நிரூபிக்க வேண்டும் என்பது தெரியவருகிறது.

8.6) மேலும், காப்பீடு விதிமுறை மீறிய செயலை நிரூபிப்பது குறித்து நமது மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் ICICI Lombard General Insurance Company Ltd., VS Annakkili & others (2012 1 TNMAC 226) என்ற முன்தீர்ப்பில் இருந்து வாகனத்தின் ஓட்டுனருக்கு ஓட்டுனர் உரிமம் இல்லை என்பதை மேற்படி வாகனத்தின் ஓட்டுனர் வசிக்கும் முகவரி அமைந்துள்ள வட்டார போக்குவரத்து அலுவலரை விசாரித்து நிரூபிக்க வேண்டும் என்பதும், வாகனத்தின்

S VIPICEE
Digitally signed by S VIPICEE
Date: 2026.08.11 13:58:31 -0800

உரிமையாளருக்கும், வாகனத்தின் ஓட்டுனருக்கும் விபத்து ஏற்படுத்திய ஓட்டுனரின் ஓட்டுனர் உரிமம் இருந்தால் தாக்கல் செய்யும்படி சட்ட அறிவிப்பு அனுப்பி அதை நிரூபிக்க வேண்டும் என்பதும் தெரிய வருகிறது.

8.7) திருப்பூர் வட்டார போக்குவரத்து அலுவலகத்தின் தட்டச்சர் எ.ம.சா.2 ஆக விசாரிக்கப்பட்ட போது தனது சாட்சியத்தில் விபத்தின் போது 1ம் எதிர்மனுதாரரின் வாகனத்தை ஓட்டிச் சென்ற சிவசந்துரு, த/பெ. ராமு, மாஸ்கோ நகர், கல்லூரி சாலை, திருப்பூர் என்பவருக்கு திருப்பூர் வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் ஓட்டுனர் உரிமம் வழங்கப்பட்டதற்கான குறிப்புகள் எதுவும் இல்லை என சாட்சியம் அளித்துள்ளார். எ.ம.சா.2ன் சாட்சியத்தை உறுதிப்படுத்தும் வகையில் திருப்பூர் வட்டார போக்குவரத்து அலுவலர் வழங்கிய எ.ம.சா.ஆ.6 கடிதம் உள்ளது.

8.8) இவ்வழக்கில் 1ம் எதிர்மனுதாரர் வாகன ஓட்டுனரின் ஓட்டுனர் உரிமத்தை கோரி 2ம் எதிர்மனுதாரர் தரப்பில் இருந்து 1ம் எதிர்மனுதாரருக்கும், அவரது ஓட்டுனருக்கும் எ.ம.சா.ஆ.2 சட்ட அறிவிப்பு அனுப்பப்பட்டுள்ளது. எ.ம.சா.ஆ.2 சட்ட அறிவிப்பில் விபத்தில் சம்மந்தப்பட்ட 2ம் எதிர்மனுதாரரிடம் காப்பீடு செய்யப்பட்ட TN.39.CQ.6583 என்ற பதிவெண் கொண்ட வாகனத்தின் உரிமையாளர் மற்றும் ஓட்டுனருக்கு விபத்தின் போது அந்த வாகனத்தை ஓட்டிச் சென்ற ஓட்டுனரின் முறையான ஓட்டுனர் உரிமம் இருந்தால் அதை ஒப்படைக்க கோரி 2ம் எதிர்மனுதாரர் கடந்த 08.06.2026ம் தேதி அறிவிப்பு அனுப்பியிருப்பது எ.ம.சா.ஆ.2, எ.ம.சா.ஆ.3 லிருந்தும், அந்த அறிவிப்பை 1ம் எதிர்மனுதாரருக்கும், அவரது ஓட்டுனருக்கும் சார்வு செய்ய இயலாமல் திருப்பப்பட்டிருப்பது எ.ம.சா.ஆ.4, எ.ம.சா.ஆ.5 லிருந்து தெரிய வருகிறது. 1ம் எதிர்மனுதாரர் இவ்வழக்கில் தோன்றாத்தரப்பினர் ஆக்கப்பட்டுள்ளார். திருப்பூர் வட்டார போக்குவரத்து அலுவலர் வழங்கிய எ.ம.சா.ஆ.6 கடிதத்தில் விபத்தின் போது 1ம் எதிர்மனுதாரரின் வாகனத்தை ஓட்டிச் சென்ற ஓட்டுனரிடம் ஓட்டுனர் உரிமம் இல்லாததால் ரூ.5,000/- அபராதம் வசூலிக்கப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

S VIPICEE Digitally signed by S VIPICEE
Date: 2026.08.11 13:58:36 -0800

அது சம்மந்தப்பட்ட சோதனை அறிக்கை எ.ம.சா.ஆ.8 ஆகவும், அபராதம் செலுத்தியது குறித்த ஆவணம் எ.ம.சா.ஆ.9 ஆகவும் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

8.9) இந்நிலையில் 1ம் எதிர்மனுதாரரின் வாகன ஓட்டுனரிடம் விபத்தில் சம்மந்தப்பட்ட TN.39.CQ.6583 என்ற பதிவெண் கொண்ட வாகனத்தை ஓட்ட உரிய ஓட்டுனர் உரிமம் இல்லை என்பதை 2ம் எதிர்மனுதாரர் தரப்பில் மேற்படிவீதம் எ.ம.சா.2ன் சாட்சியம் மற்றும் எ.ம.சா.ஆ.6 முதல் எ.ம.சா.ஆ.10 சான்றாவணங்கள் மூலம் உரியவாறு நிரூபணம் செய்துள்ளதாகவே இந்த தீர்ப்பாயம் கருதுகிறது. இந்நிலையில் 2ம் எதிர்மனுதாரர் மனுதாரருக்கு இழப்பீடு வழங்க கடமைப்பட்டவர் அல்ல என 2ம் எதிர்மனுதாரர் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞரால் எதிர்வழக்காடப்பட்டது.

8.10) இந்த வழக்கில் 2ம் எதிர்மனுதாரர் தரப்பில் விபத்தின் போது 1ம் எதிர்மனுதாரருக்கு செல்லத்தக்க ஓட்டுனர் உரிமம் இல்லை என்பதை மேற்படி சாட்சிய சான்றாவணங்கள் மூலம் நிரூபணம் செய்யப்பட்டுள்ளது. 1. நியூ இண்டியா இன்சூரன்ஸ் கம்பெனி லிட் எதிர் தர்ஷணாதேவி (2008 ACJ 1388), 2. நியூ இண்டியா அசூரன்ஸ் கம்பெனி லிட் எதிர் கம்லா மற்றும் பலர் (2001 ACJ 843), 3. நேஷனல் இன்சூரன்ஸ் கம்பெனி எதிர் ஸ்வரன்சிங் (2004 ACJ 1), ஓரியண்டல் இன்சூரன்ஸ் கம்பெனி லிட். எதிர் ரகேஷ்குமார் மற்றும் பலர் (2012 ACJ 1268) ஆகிய முன்தீர்ப்புகளில் சொல்லப்பட்டதன் படி பார்க்கையில் இழப்பீட்டு தொகையை 2ம் எதிர்மனுதாரர் நிறுவனம் செலுத்திவிட்டு 1ம் எதிர்மனுதாரரிடம் இருந்து பின்னிட்டு அந்த தொகையை வசூலித்துக் கொள்ள உத்தரவிடுவதே உகந்ததாக இருக்கும் என இந்த தீர்ப்பாயம் கருதுகிறது.

8.11) 1ம் எதிர்மனுதாரரின் வாகனமானது 2ம் எதிர்மனுதாரரிடம் செய்த காப்பீடு விபத்து சமயத்தில் அமுலில் இருப்பதாலும், இந்த விபத்தானது 1ம் எதிர்மனுதாரரின் வாகன ஓட்டுனரின் கவனக்குறைவு மற்றும் அஜாக்கிரதையால் நிகழ்ந்துள்ளதாலும் மனுதாரருக்கான இழப்பீட்டை 2ம்

S VIPICEE
Digitally signed by S VIPICEE
Date: 2026.08.11 13:58:44 -0800

எதிர்மனுதாரர் செலுத்த வேண்டும் எனவும், அந்த இழப்பீட்டுத் தொகையை மீண்டும் 2ம் எதிர்மனுதாரர் 1ம் எதிர்மனுதாரரிடம் இருந்து வசூலித்துக் கொள்ள வேண்டும் எனவும் உத்தரவிடுவதே உகந்ததாக இருக்கும் என இந்த தீர்ப்பாயம் கருதுகிறது. அவ்வாறே இப்பிரச்சனைகளுக்கு மனுதாரருக்கு சாதகமாக தீர்வு காணப்படுகிறது.

9. <u>பிரச்சனை எண்.4 க்கான தீர்வு :</u>

9.1) விபத்தில் காயம்பட்ட நபர் இழப்பீடு கோரி தாக்கல் செய்யப்படும் மனுக்களில் எந்தெந்த தலைப்பின் கீழ் இழப்பீடு வழங்கலாம் என்பது குறித்து நமது மாண்புமிகு உச்சநீதிமன்றத்தால் வழங்கப்பட்ட 2010 (2) TNMAC 581 RajKumar Vs Ajaykumar and another என்ற முன்தீர்ப்பின் வழிகாட்டுதல் அடிப்படையில் மனுதாரருக்கு இழப்பீடு வழங்கலாம் என இந்த தீர்ப்பாயம் கருதுகிறது. இவ்வழக்கில் மனுதாரர் ம.சா.1 ஆக விசாரிக்கப்பட்ட போது தனது சாட்சியத்தில் விபத்தினால் மனுதாரருக்கு தலை, வலது மற்றும் இடது கை முட்டி, முதுகு ஆகிய இடங்களில் இரத்த சிராய்ப்பு காயங்களும், இடது கண் அருகே பலத்த இரத்தக்காயங்களும் மற்றும் உடல் முழுவதும் இரத்தக்காயங்களும், உள்காயங்களும் ஏற்பட்டதாக சாட்சியம் அளித்துள்ளார்.

9.2) ம.சா.ஆ.2 விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்றிதழ், ம.சா.ஆ.3 விடுவிப்பு அறிக்கை ஆகியவற்றை பரிசீலிக்கையில் மனுதாரர் விபத்து ஏற்பட்டவுடன் திருப்பூர் கேர் ஆர்த்தோ மருத்துவமனையில் சேர்ந்து சிகிச்சை பெற்றுக் கொண்டு பின்னர் கோவை பிளஸ்ஜி மருத்துவமனையில் 30.01.2022 முதல் 07.02.2022 வரை உள்நோயாளியாக இருந்து சிகிச்சை பெற்றிருப்பதும், இந்த விபத்தினால் மனுதாரருக்கு INJURY OVER THE HEAD, INJURY OVER THE LEFT EYE, MULTIPLE ABRASION OVER THE LEFT AND RIGHT HAND INJURY (MINIMAL SUBDURAL HEMORRHAGE ALONG SUPERIOR ASPECT OF LEFT TENTORIUM என்ற கொடுங்காயம் ஏற்பட்டிருப்பதும், அதற்காக Medical Management என்ற மருத்துவ சிகிச்சை பெற்றிருப்பதும் தெரியவருகிறது.

S VIPICEE Digitally signed by S VIPICEE
Date: 2026.08.11 13:58:48 -0800

9.3) மனுதாரருக்கு மேற்படிவீதம் ஏற்பட்ட காயங்கள் மற்றும் மருத்துவ சிகிச்சைகளை கருத்தில் கொண்டு வலி மற்றும் வேதனைக்காக ரூ.50,000/- வழங்கலாம் எனவும், விபத்து காயத்தினால் மனுதாரருக்கு ஏற்படும் சிரமத்தை கருத்தில் கொண்டு வசதி இழப்பிற்காக ரூ.20,000/- வழங்கலாம் எனவும் இந்த தீர்ப்பாயம் கருதுகிறது.

9.4) மேலும் மனுதாரருக்கு ஏற்பட்ட காயத்திற்காக மேற்படி வீதம் மேற்கொண்ட சிகிச்சைக்காக மூன்று மாதம் ஓய்வு எடுக்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டிருக்கும். எனவே, மனுதாரருக்கு மூன்று மாத வருமானத்திற்கான இழப்பீடு வழங்கலாம் என இந்த தீர்ப்பாயம் கருதுகிறது. மனுதாரர் விபத்து சமயத்தில் சேல்ஸ் மேன், குவாலிடி கன்ட்ரோலர், அயர்ன் மாஸ்டராக வேலை செய்து மாதம் ரூ.30,000/-க்கு மேல் சம்பாதித்து வந்ததாக மனுவில் கூறி அதன்படி ம.சா.1 சாட்சியம் அளித்துள்ளார். மனுதாரரின் வேலை குறித்த அடையாள அட்டை ம.சா.ஆ.9 ஆகவும், சம்பள சான்று ம.சா.ஆ.10, ம.சா.ஆ.11 ஆகவும் குறியீடு செய்யப்பட்டுள்ளது. ம.சா.ஆ.10 ல் மனுதாரர் 20.12.2020 தேதியில் இருந்து சுமார் 1 வருட காலமாக அந்த தனியார் நிறுவனத்தின் அயர்ன் மாஸ்டராக பணிபுரிந்ததாகவும், அவருக்கு வார சம்பளமாக பீஸ் ரேட் முறையில் வாரம் சுமார் ரூ.4,000/- முதல் ரூ.5,000/- வரை சம்பளமாக வழங்கப்பட்டது எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. ம.சா.ஆ.11 சம்பள சான்றானது 2018 மே மாதத்திற்கு உரியதாகும். ஆனால் இந்த விபத்து 2022 ஜனவரி மாதத்தில் ஏற்பட்டுள்ளது. மனுதாரர் விபத்திற்கு முன்னர் முந்தைய மாதங்களில் மாதம் எவ்வளவு வருமானம் பெற்று வந்தார் என்பதை காண்பிக்கும் வகையில் அறுதியிட்ட சாட்சியங்கள் எதுவும் சமர்பிக்கப்படவில்லை. ம.சா.ஆ.10 சான்றாவணத்தில் கூட மனுதாரரின் சம்பளம் தோராயமாகத்தான் கூறப்பட்டுள்ளது. இந்நிலையில் மனுதாரரின் மாத வருமானத்தை தோராயமாக நிர்ணயம் செய்ய வேண்டியுள்ளது.

S VIPICEE Digitally signed by S VIPICEE
Date: 2026.08.11 13:58:52 -0800

9.5) விபத்தின் போது மனுதாரரின் வயது 30 என மனுவில் கூறப்பட்டுள்ளது. ஆனால் மனுதாரரின் பிறந்த தேதி 17.06.1994 என ம.சா.ஆ.8 ஆதார் அட்டையில் கண்டுள்ளது. எனவே, விபத்தின்போது மனுதாரரின் வயது 28 என இந்த தீர்ப்பாயம் எடுத்துக்கொண்டு விபத்து ஏற்பட்டது 2022ம் ஆண்டு என்பதை கருத்தில் கொண்டு மனுதாரர் குறைந்தபட்சம் மாதம் ரூ.14,000/– வருமானம் ஈட்டக்கூடும் என தோராயமாக இந்த தீர்ப்பாயம் நிர்ணயம் செய்கின்றது. எனவே, மூன்று மாத வருமான இழப்பாக ரூ.42,000/– மனுதாரருக்கு வழங்கலாம் என இந்த தீர்ப்பாயம் கருதுகிறது.

9.6) இந்த விபத்தினால் மனுதாரருக்கு ஏற்பட்ட காயங்களுக்காக மனுதாரர் மருத்துவ சிகிச்சை மேற்கொண்டதற்கான மருத்துவ பில்கள் ம.சா.ஆ.4 ஆக மனுதாரர் தரப்பில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இந்த மருத்துவ பில்கள் போலியானது என 2ம் எதிர்மனுதாரர் தரப்பில் ஆட்சேபனை செய்திருப்பினும் அதுகுறித்து 2ம் எதிர்மனுதாரர் தரப்பில் எவ்வித சாட்சியமும் சமர்ப்பிக்கப்படவில்லை. ம.சா.ஆ.4 யை பரிசீலிக்கையில் 29.01.2023 தேதியிட்ட ரூ.300/–க்கான பில்லானது போக்குவரத்து செலவினம் ஆகும். 30.01.2022 தேதியிட்ட ரூ.339.20 க்கான பில்லில் மனுதாரரின் பெயர் குறிப்பிடப்படவில்லை. ஆதலால் இந்த பில்களில் கண்ட தொகை மனுதாரருக்கு கிடைக்கத்தக்கதல்ல. 30.01.2022 தேதியிட்ட ரூ.11,000/–க்கான இறுதி பில்லில் ரூ.4,000/– போக்குவரத்து செலவினமாக உள்ளது. ஆதலால் இந்த பில்லின் படி மனுதாரருக்கு மருத்துவ செலவினமாக ரூ.7,000/– மட்டுமே கிடைக்கத்தக்கது. 30.01.2022 தேதியிட்ட ரூ.30,000/–, 01.02.2022 தேதியிட்ட ரூ.10,000/– ஆகிய பில்களில் கண்ட தொகையானது முன்பணத் தொகையாக வசூலிக்கப்பட்டுள்ளது. இந்த முன்பணத் தொகையானது இறுதி பில்லில் சரிசெய்யப்படும் என்பதால் இந்த பில்களில் கண்ட தொகை மனுதாரருக்கு கிடைக்கத்தக்கதல்ல. மேற்சொன்ன கழிக்கப்பட வேண்டிய பில் தொகை போக மற்ற பில்கள் குறித்து சந்தேகிக்கும் வகையில் எதுவும் இல்லை என்பதால் மற்ற

S VIPICEE Digitally signed by S VIPICEE
Date: 2026.08.11 13:58:57 -0800

மருத்துவ பில்களின் மொத்த தொகை ரூ.1,27,748/-மனுதாரருக்கு மருத்துவ செலவினம் என்ற தலைப்பின் கீழ் கிடைக்கத்தக்கது என்று இந்த தீர்ப்பாயம் முடிவு செய்கிறது. விபத்தினால் மனுதாரருக்கு எதிர்கால மருத்துவ செலவு இருப்பது குறித்து மனுதாரர் தரப்பில் எவ்வித சாட்சியங்களும் சமர்ப்பிக்கப்படவில்லை. ஆதலால் அதற்கான இழப்பீடு தொகை எதுவும் மனுதாரருக்கு கிடைக்கத்தக்கது அல்ல.

9.7) ம.சா.ஆ.4 மருத்துவ பில்களில் 29.01.2022 தேதியிட்ட ரூ.300/-, 30.01.2022 தேதியிட்ட ரூ.11,000/-க்கான மருத்துவ பில்லில் ரூ.4,000/- போக்குவரத்து செலவின தொகையாக உள்ளது. இந்த பில்கள் குறித்து சந்தேகிக்கும் வகையில் எதுவும் இல்லை என்பதால் மனுதாரருக்கு போக்குவரத்து செலவினம் என்ற தலைப்பின் கீழ் ரூ.4,300/- கிடைக்கத்தக்கது என இந்த தீர்ப்பாயம் கருதுகிறது.

9.8) மேலும் விபத்தினால் மனுதாரருக்கு ஏற்பட்ட நிரந்தர ஊனத்தை நிர்ணயம் செய்ய மனுதாரர் மருத்துவ குழுமம் முன்பு ஆஜராகி பெற்ற ஊனச் சான்றிதழ் நீ.ம.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேற்படி ஆவணத்தில் மனுதாரருக்கு 3% ஊனம் ஏற்பட்டதாக மருத்துவ குழுமம் சான்றிதழ் வழங்கியுள்ளது. மனுதாரருக்கு ஏற்பட்ட இந்த ஊனமானது அவரது தொழிலை பொறுத்த வரையில் சம்பாதிக்கும் திறனை பாதிக்கிறது என்பதை காண்பிக்கும் வகையில் எவ்வித சாட்சியங்களும் மனுதாரர் தரப்பில் சமர்பிக்கப்படவில்லை. இந்நிலையில் மனுதாரருக்கு ஏற்பட்ட ஊனம் தொழிலை பொறுத்த வரையில் சம்பாதிக்கும் திறனை பாதிப்பதாக இல்லை என இந்த தீர்ப்பாயம் முடிவு செய்து அதன்படி மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றத்தால் வழங்கப்பட்ட Iffco Tokio General Insurance Co. Ltd Vs. Venkatesh and others 2022 (1) TNMAC 299 என்ற முன்தீர்ப்பில் கூறியுள்ளதன் படி பார்க்கையில் பெருக்கல் குறியீட்டின் அடிப்படையில் ஊனத்திற்கான இழப்பீடு கிடைக்கதக்கதல்ல என்று இந்த

S
VIPICEE
Digitally signed by S VIPICEE
Date: 2026.08.11 13:59:03 -0800

தீர்ப்பாயம் கருதுகிறது. M.ரேவந்த்குமார் எதிர் சன் எக்ஸ் காண்கிரீட் இண்டியா பிரைவேட் லிமிடெட், சென்னை மற்றும் ஒருவர் (CMA No. 13/2025, தீர்ப்புரை தேதி 10.01.2025) 2025 (2) TN MAC 181 என்ற முன்தீர்ப்பு வழக்கில் மாண்பமை சென்னை உயர்நீதிமன்றம் 2022ம் வருடத்தில் ஏற்பட்ட விபத்திற்கு 1% ஊனத்திற்கு ரூ.10,000/- வழங்கியுள்ளது. இந்த வழக்கு விபத்து ஏற்பட்டது 2022 ஆம் ஆண்டு என்பதை கருத்தில் கொண்டும், விலைவாசி உயர்வை கருத்தில் கொண்டும் 1% ஊனத்திற்கு ரூ.10,000/- அளிக்கலாம் என இந்த தீர்ப்பாயம் கருதி அதன் அடிப்படையில் மனுதாரருக்கு ஏற்பட்ட 3% ஊனத்திற்காக 3 x ரூ.10,000 = ரூ.30,000/- இழப்பீடாக வழங்கலாம் என இந்த தீர்ப்பாயம் கருதுகிறது.

9.9) மனுதாரர் தனியார் மருத்துவமனையில் 30.01.2022 முதல் 07.02.2022 வரை உள்நோயாளியாக சிகிச்சை பெற்றுள்ளதை கருத்தில் கொண்டு ரூ.4,500/- மனுதாரருக்கு உடனிருந்தோர் செலவுத்தொகை என்ற தலைப்பின் கீழ் இழப்பீடு வழங்கலாம் எனவும், மேலும் மனுதாரருக்கு ஊட்டச்சத்து செலவிற்காக ரூ.10,000/- வழங்கலாம் எனவும், ஆடைகள் மற்றும் ஆபரணங்கள் சேதத்திற்கு ரூ.2,000/- வழங்கலாம் எனவும் இந்த தீர்ப்பாயம் கருதுகிறது. மேற்கண்ட விவாதங்களின்படி மனுதாரருக்கு கீழ்க்கண்ட இழப்பீடுகள் கிடைக்கக்கூடியது என்று தீர்ப்பாயம் கருதுகிறது.

வ.எண்	இழப்பீட்டிற்கான தலைப்புகள்	தொகை விபரம்	
1	வலி மற்றும் வேதனைக்காக	ரூ.	50,000
2	வசதி இழப்பிற்காக	ரூ.	20,000
3	உடனிருந்தோர் செலவிற்காக	ரூ.	4,500
4	வருமான இழப்பிற்காக	ரூ.	42,000
5	நிரந்தர ஊனத்திற்காக	ரூ.	30,000
6	ஊட்டச்சத்து செலவிற்காக	ரூ.	10,000
7	போக்குவரத்து செலவிற்காக	ரூ.	4,300
8	ஆடைகள் மற்றும் ஆபரணங்கள் சேதத்திற்காக	ரூ.	2,000

S VIPICEE
Digitally signed by S VIPICEE
Date: 2026.08.11 13:59:07 -0800

9	மருத்துவ செலவினத்திற்காக	ரூ	1,27,748
	மொத்தம்	**ரூ.**	2,90,548
	Rounded to	**ரூ.**	2,90,600

9.10) மனுதாரருக்கு இழப்பீடாக **ரூ.2,90,600/-** கிடைக்கத்தக்கது என்று இந்த தீர்ப்பாயம் உத்தரவிடுகிறது. அவ்வாறே பிரச்சனை எண்.4 க்கு மேற்படிவிதம் தீர்வு காணப்படுகிறது.

10. <u>பிரச்சனை எண்.5 க்கான தீர்வு :</u>

மனுதாரருக்கு வேறு எந்த பரிகாரமும் கிடைக்கத்தக்கது அல்ல என்று பிரச்சனை எண்.5 க்கு தீர்வு காண்கிறது.

11) இறுதியாக, இம்மனு எதிர்மனுதாரர்களுக்கு எதிராக பகுதியாக அனுமதிக்கப்படுகிறது. மனுதாரருக்கு 2ம் எதிர்மனுதாரர் இழப்பீட்டு தொகை **ரூ.2,90,600/-**(ரூபாய் இரண்டு லட்சத்து தொண்ணூறாயிரத்து அறநூறு மட்டும்) மனுதாக்கல் தேதியிலிருந்து தொகை வசூலாகும் தேதிவரை ஆண்டு ஒன்றுக்கு 7.5% வட்டியுடன் (மனு தள்ளுபடியாகி இருப்பின் மேற்படிகாலம் நீங்கலாக) இம்மனுவின் செலவுத்தொகை ரூ.20,478.50 யையும் சேர்த்து இன்றிலிருந்து முப்பது நாட்களுக்குள் தருமபுரி மாவட்டம், ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியா பிரதான கிளை இந்நீதிமன்றத்தின் வங்கி கணக்கு எண் VAN Collection No.SSJDP1MCOP1562025, IFSC Code: SBIN0004266 என்ற கணக்கில் NEFT/RTGS முறையில் நேரடியாக வங்கி மாற்றம் மூலம் செலுத்த வேண்டும் என்றும், அவ்வாறு செலுத்திய பின்பு 2ம் எதிர்மனுதாரர் வங்கி அறிவுறுத்தலின் நகல் (Copy of Bank advice) ஒன்றை இத்தீர்ப்பாயத்திற்கும், அதன் மற்றொரு நகலை மனுதாரர் அல்லது அவரது வழக்கறிஞருக்கும் அனுப்பவும், அவ்வாறு 2ம் எதிர்மனுதாரர் வைப்பீடு செய்யும் தொகையை 1ம் எதிர்மனுதாரரிடமிருந்து வசூலித்துக் கொள்ள அனுமதியளித்தும் (Pay and Recovery) உத்தரவிடப்படுகிறது. மேற்படி தொகை மற்றும் மனுதாரரின் செலவுத்தொகை மற்றும் மொத்த தொகைக்கான வட்டி ஆகியவைகள் செலுத்தப்பட்டவுடன்

S VIPICEE
Digitally signed by S VIPICEE
Date: 2026.08.11 13:59:12 -0800

உடனடியாக மேற்படி தொகைகளை மனுதாரர் மனு செய்து பெற்றுக் கொள்ளலாம் எனவும், மனுதாரர் இத்தீர்ப்பாயத்தை அணுகி மனு தாக்கல் செய்த பின்னர் மேற்படி மனுதாரருக்கான இழப்பீட்டு தொகையை மனுதாரர் வங்கி கணக்கில் செலுத்தவும் உத்தரவிடப்படுகிறது. பற்றாக்குறை நீதிமன்ற கட்டணம் ரூ.1,906/–யை இரண்டு வாரங்களுக்குள் நீதிமன்றத்தில் செலுத்தவும் உத்தரவிடப்படுகிறது. அவ்வாறு செலுத்தத் தவறும் பட்சத்தில் இவ்வுத்தரவு நிறைவேற்றுதற்குரியது அல்ல என்றும் உத்தரவிடப்படுகிறது. வழக்கறிஞர் கட்டணம் ரூ.18,030/– என நிர்ணயம் செய்யப்படுகிறது. 2020(4) CTC 272, M/s.சோழமண்டலம் MS ஜெனரல் இன்சூரன்ஸ் கம்பெனி லிமிடெட் எதிர் அய்யனார் மற்றும் பலர் என்ற மாண்பமை சென்னை உயர்நீதிமன்றத்தின் தீர்ப்புரையை பின்பற்றி இவ்வழக்கில் தீர்ப்பாணை தயாரிக்கப்படவில்லை. மோட்டார் வாகனச் சட்டம் பிரிவு 168(2)ன் படி இந்த உத்தரவின் நகலை வழக்கு தரப்பினர்களுக்கு இலவசமாக வழங்கப்பட வேண்டும்.

இந்த உத்தரவானது என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு பின் என்னால் சரி பார்க்கப்பட்டு 2026ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 11ம் நாள் இந்நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

S VIPICEE

Digitally signed by S VIPICEE
Date: 2026.08.11 13:59:16 -0800

மோட்டார் வாகன விபத்து கோருரிமை தீர்ப்பாய நீதிபதி,
சிறப்பு சார்பு நீதிபதி, தருமபுரி.

மனுதாரர் தரப்பு சாட்சி :

ம.சா.1 – சிவக்குமார்

மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள் :

வ.எண்	ஆவணம்	தன்மை
ம.சா.ஆ.1	முதல் தகவல் அறிக்கை	நகல்
ம.சா.ஆ.2	மனுதாரரின் விபத்து பதிவேடு மற்றும் காயச்சான்று	நகல்

ம.சா.ஆ.3	மனுதாரரின் விடுவிப்பு அறிக்கை	நகல்
ம.சா.ஆ.4	மனுதாரரின் மருத்துவ பில்கள்	அசல்
ம.சா.ஆ.5	1ம் எதிர்மனுதாரர் வாகனத்தின் பதிவு சான்று	நகல்
ம.சா.ஆ 6	1ம் எதிர்மனுதாரர் வாகனத்தின் காப்பீட்டு சான்று	நகல்
ம.சா.ஆ.7	1ம் எதிர்மனுதாரர் வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வறிக்கை	நகல்
ம.சா.ஆ.8	மனுதாரரின் ஆதார் அட்டை	நகல்
ம.சா.ஆ.9	மனுதாரரின் அடையாள அட்டை	நகல்
ம.சா.ஆ.10	மனுதாரரின் சம்பள சான்று	நகல்
ம.சா.ஆ.11	மனுதாரரின் சம்பள ரசீதுகள்	அசல்
ம.சா.ஆ.12	மனுதாரரின் வங்கி கணக்கு புத்தகம்	நகல்

நீதிமன்ற சான்றாவணம்:

வ.எண்	ஆவணம்	தன்மை
நீ.ம.சா.ஆ.1	மனுதாரரின் ஊனச்சான்றிதழ்	அசல்

2ம் எதிர்மனுதாரர் தரப்பு சாட்சிகள்:

எ.ம.சா.1 – பிரேம்குமார்

எ.ம.சா.2 – ஜெயசீலன்

2ம் எதிர்மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள் :

வ.எண்	ஆவணம்	தன்மை
எ.ம.சா.ஆ.1	TN.39.CQ.6333 என்ற பஜாஜ் பல்சர் இருசக்கர வாகனத்தின் காப்பீட்டு சான்று மற்றும் விதிமுறைகள்	சான்அசல்
எ.ம.சா.ஆ.2	1ம் எதிர்மனுதாரர் மற்றும் ஓட்டுனர் சிவசந்துரு என்பவருக்கு அனுப்பிய சட்ட அறிவிப்பு	அலுவலக நகல்
எ.ம.சா.ஆ.3	சட்ட அறிவிப்பு அனுப்பியதற்கான அஞ்சலக ரசீதுகள்	அசல்
எ.ம.சா.ஆ.4	1ம் எதிர்மனுதாரருக்கு அனுப்பப்பட்டு திருப்பப்பட்ட அஞ்சலக உறை	அசல்
எ.ம.சா.ஆ.5	ஓட்டுனர் சிவசந்துரு என்பவருக்கு அனுப்பப்பட்டு திருப்பப்பட்ட அஞ்சலக உறை	அசல்

S VIPICEE
Digitally signed by S VIPICEE
Date: 2026.08.11 13:59:23 -0800

எ.ம.சா.ஆ.6	திருப்பூர் வட்டார போக்குவரத்து அலுவலர் வழங்கிய அனுமதி கடிதம்	அசல்
எ.ம.சா.ஆ.7	TN.33.CQ.6583 என்ற இருசக்கர வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கை	நகல்
எ.ம.சா.ஆ.8	சோதனை அறிக்கை	நகல்
எ.ம.சா.ஆ.9	அபராதம் செலுத்தியதற்கான ஆவணம்	நகல்
எ.ம.சா.ஆ.10	சிவசந்துரு, த/பெ. ராமு என்பவருக்கு ஓட்டுனர் உரிமம் உள்ளதா என தேடிப்பார்த்ததற்கான கணினி நகல்	நகல்

S VIPICEE

Digitally signed by S VIPICEE
Date: 2026.08.11 13:59:28 -0800

மோட்டார் வாகன விபத்து கோருரிமை தீர்ப்பாய நீதிபதி,
சிறப்பு சார்பு நீதிபதி, தருமபுரி.